வ.உ.சி.யும் தொல்காப்பியமும்

செ.திவான்

வ.உ.சி.யும்
தொல்காப்பியமும்

வரலாற்று ஆய்வாளர்

செ. திவான், எம்.ஏ.,எம்.ஃபில்.,

சுஹைனா பதிப்பகம்

106F, 4A, திருவனந்தபுரம் சாலை

பாளையங்கோட்டை

தமிழ்நாடு

✆ 0462-572665.

பதிப்பாசிரியரின் 39-வது நூல்

முதற்பதிப்பு : ஜனவரி 26, 2001

விலை : இலவச வெளியீடு

அச்சிட்டோர் : கனி ஆப்செட் பிரிண்டர்ஸ், நெல்லை-6.

சமர்ப்பணம்

அரசியல் நிர்ணய சபை உறுப்பினரும்
(Members of the Constituent Assembly)
அந்தக்கூட்ட நடவடிக்கைகளில்
அன்னைத் தமிழில் கையெழுத்திட்ட தமிழன்பரும்,
சுதந்திரப் போராட்டத் தியாகியுமான

தூத்துக்குடி **M.C. வீரபாகு பிள்ளை** B.A.,B.L. அவர்களுக்கு....



- சுஹைனா பதிப்பகம்

எண்ண அலைகள்

வீரத் தலைவர் வ.உ.சி.யின் வாழ்க்கை நிகழ்ச்சிகள்

உலகெல்லாம் வாழும் தமிழர்கள் நினைத்து நினைத்துப் பெருமை கொள்ளவும், போற்றிப் பாராட்டிடும் வகையிலும் தரணியில் தனக்கெனத் தனிச்சிறப்புப் பெற்ற உத்தமத் தலைவர் வ.உ.சி.யின் வாழ்க்கை நிகழ்ச்சிகள்...

பிறப்பு

இன்றைய தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் 1872ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் நாள் வியாழக்கிழமையன்று, உலகநாதப் பிள்ளைக்கும்-பரமாயி அம்மையாருக்கும் மகனாத் தோன்றினார் வ.உ.சி. இவருக்கு உடன்பிறந்தோர் எழுவர்; தந்தை உலகநாதப் பிள்ளையின் தமையன் சிதம்பரம் என்பவரின் நினைவாக சிதம்பரம் என்ற பெயர் சூட்டப்பட்டது.

கல்வி

வீரப் பெருமாள் அண்ணாவியிடம் தொடக்கக் கல்வியையும், கிருட்டினன் என்பவரிடம் ஆங்கிலமும், ஒட்டப்பிடாரத்தில் நடுத்தரக் கல்வியையும், திருநெல்வேலி ம.தி.தா.உயர்நிலைப் பள்ளியிலும், தூத்துக்குடியில் உயர்நிலைக் கல்வியும் பெற்று திருச்சிராப் பள்ளியில் சட்டக் கல்வியும் பயின்று தேறினார். கஸ்தூரி ஐயங்கார், அண்ணாத்துரை ஐயர், சவரிராயப்பிள்ளை ஆகியோரிடமும் ஆங்கில-தமிழ் மொழிகளையும் சிறப்பாகக் கற்றறிந்தார்.

திருமணம்

ஒட்டப்பிடாரத்தில் வட்டார அலுவலகத்தில் எழுத்தராகப் பணியினைத் துவங்கிய வ.உ.சி, 1895 இல் தூத்துக்குடியில் வழக்குரைஞர் தொழிலைத் தொடங்கலானார். 1895 இல் திருச்செந்தூர் சுப்பிரமணியம் பிள்ளையின் மகள் வள்ளியம்மையை மணந்தார்; கி.பி.1900 ஆம் ஆண்டில் அவர் மறைந்ததும், மீனாட்சி அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார்.

கப்பலோட்டிய தமிழன்

1905 முதல் 1908 வரை நான்கு ஆண்டுகள் வ.உ.சி.யின் அரசியல் வாழ்வில் துடிப்புள்ள ஆண்டுகளாகும். 1906 அக்டோபர் 16இல் தூத்துக்குடியில் 'சுதேசிக் கப்பல் கம்பெனி' யைத் துவங்கினார். 1907 இல் சூரத் காங்கிரசிலும், 1908 இல் 'தேசாபிமான சங்கம்' நெல்லையில் அமையவும் வ.உ.சி. ஆற்றிய பணிகள் குறிப்பிடத் தக்கது.

சுப்பிரமணிய சிவா

1908 பிப்ரவரி 3 முதல் மார்ச் 9 வரை வீர முரசு சுப்பிரமணிய சிவாவுடன் இணைந்து பணியாற்றியவர் வ.உ.சி. அப்போது அவர்கள் ஆற்றிய தொடர் சொற்பொழிவுகள் தமிழக அரசியலில் விடுதலைத் தீயை வளர்த்தது. ஆத்திரங்கொண்ட ஆங்கிலேய அரசினரால் 1908 மார்ச் 12இல் கைது செய்யப்பட்டார். 1908 ஜுலை 7இல் வெள்ளையர் அரசு வ.உ.சி.க்கு இரட்டை ஆயுள் தண்டனையை வழங்கியது.

செக்கிழுத்த செம்மல்

கோவைச் சிறையிலும், கண்ணனூர் சிறையிலும் வாடிய வ.உ.சி. நான்கு வருடம் 11 மாதங்கள், 12 நாட்கள் சிறைவாசத்திற்குப் பின் 24.12.1912இல் விடுதலையானார்.

சென்னை-கோவை-கோயிற்பட்டி வாழ்க்கை

சென்னை சிந்தாதிரிப் பேட்டையில் அருணாச்சல நாயகன் வீதியிலும், திருமயிலையிலும், பிரம்பூரிலும் வாழ்ந்த வ.உ.சி. (1912-1919) குடும்பத்தை நடத்தும் பொருட்டு அரிசி வியாபாரமும், நெய் வியாபாரமும் செய்தார்.

சென்னையில் தொடர்ந்து வாழமுடியாமல் நண்பர்களின் வேண்டுகோளை ஏற்று கோவையில் வாழத் துவங்கினார் (1919-1922). அப்போது அரசியலிலிருந்து முழுமையாக விலகினார். காங்கிரசில் மிதவாதிகளின் செல்வாக்கினால், தீவிரவாதியான வ.உ.சி. காங்கிரசு இயக்கத்திலிருந்தும் தம்மை விடுவித்துக் கொண்டார்.

1922இல் கோயிற்பட்டியில் குடியேறி வழக்குரைஞர் தொழிலை நடத்தி வந்த வ.உ.சி. 1927 இல் அரசியலில் திரும்பவும் தம்மை உட்படுத்திக் கொண்டு, சேலத்தில் நிகழ்ந்த மாநாட்டில் தலைமையேற்றுச் சிறப்பித்தார். தந்தை ஈ.வே.ரா.அவர்களுடன் நட்பை வளர்த்துக் கொண்டார்.

இறுதி

1932 இல் ஆட்சித் துணைத் தலைவரின் தலைமையிடம் கோயிற்பட்டியிலிருந்து தூத்துக்குடிக்கு மாற்றப்பட்டதால் வ.உ.சி.யும் தூத்துக்குடியில் குடியேறினார்; அங்கு உடல் நலிவிற்கிடையில் வழக்குரைஞர் தொழிலை நடத்தி வந்தார். 1936 நவம்பர் 18 இரவு 11.30 மணியளவில் பூதவுடல் நீத்துப் புகழுடம்பு எய்தினார்.

வ.உ.சி.யின் இலக்கியப் பணிகள்

அரசியல் உலகில் அஞ்சா நெஞ்சர் வ.உ.சி. ஆற்றிய அரும்பணிகளை அறிந்த அளவிற்கு அவரது இலக்கியத் தொண்டினை அகிலம் முழுமையாக இதுவரை அறியவே இல்லை எனலாம்.

மெய்யறிவு, மெய்யறம், பாடற்றிரட்டு, வ.உ.சி.கண்ட பாரதி, சுயசரிதை, மனம் போல வாழ்வு, அகமே புறம், வலிமைக்கு மார்க்கம், சாந்திக்கு மார்க்கம், திருக்குறள் அறத்துப்பால் உரை, சிவஞான போத உரை ஆகிய நூல்களை எழுதியவர் வ.உ.சி. அவர் தொல்காப்பியம் இளம்பூரணர் உரை, பொருளதிகாரத்தின் அகத்திணை, புறத்திணை இயல்கள், பொருளதிகாரத்தின் பின் ஏழு இயல்களையும் பதிப்பித்துள்ளார். சேலம் ஜில்லா மாநாட்டில் ஆற்றிய உரையினை அரசியல் பெருஞ்சொல் என்றும் வெளியிட்டார். விவேகபாநு, தமிழ் நேஷனல் பத்திரிக்கை, இந்து நேசன், வீரகேசரி, பாரதி போன்ற பத்திரிகைகளில் பல கட்டுரைகள் எழுதியும் உள்ளார்.

அச்சில் வராத நூல்கள்

'அழகும் ஆரோக்கியமும்' என்ற வ.உ.சி. எழுதி அச்சில் வராத கட்டுரைகளைத் தேடியெடுத்து நூலாக்கினேன். எனினும், ஆயுளை நீடிக்கும் ஆறு, ஊழலை வெல்ல உபாயம், சிவமதம், விஷ்ணுமதம், புத்தமதம், இஸ்ஸாம் மதம், கிறிஸ்து மதம், மனித மதம், முக்தி நெறி, The Universal Scripture, திருக்குறள் மணக்குடவர் உரை (பொருள்) திருக்குறள் மணக்குடவர் உரை (இன்பம்) திலகமகிரிஷி போன்ற பல நூற்கள் வ.உ.சி.யால் எழுதப்பட்டு இன்றும் அச்சில் வராத அவலநிலையே இருந்து வருகிறது. (அதனைத் தேடி எடுத்து நூலாக்கிடும் பணியினை தமிழ் ஆர்வலர்களும், அரசாங்கமும் செய்திட வேண்டும்.)

கவிதை நூல்கள் - மெய்யறம்

எத்திக்கும் புகழ் மணக்கும் தித்திக்கும் தேன்தமிழில் அமைந்த திருக்குறளின் அடிப்படையில் வ.உ.சி.இயற்றிய நூல் மெய்யறம், திருக்குறளின் வழி நூலான இதனை தஞ்சை இராவ் பகதூர் சீனிவாசப் பிள்ளைக்கு வ.உ.சி.காணிக்கையாக்கி வெளியிட்டார்.

மாணவர் இயல், இல்வாழ்வியல், அரசியல், அந்தணவியல், மெய்யியல் என்னும் ஐந்தியல்களையும் 125 அதிகாரங்களையும் கொண்ட இந்நூல், மெய்நிலையை அடையும் கோட்பாடு குறித்து விளக்குகிறது.

சென்னை பெரம்பூரில் வ.உ.சி. வாழ்ந்தபோது 1917 இல் மெய்யறம் நூலின் முதற்பதிப்பு வெளிவந்தது. 1936 இல் அம்பாசமுத்திரம் ஷண்முகவிலாசம் பிரஸில் அச்சிடப்பட்டு மூன்றாம் பதிப்பு வெளியாயிற்று. தொடர்ந்து பாரிநிலையத்தார் இதன் பதிப்புகளை வெளியிட்டுள்ளனர்.

சுய சரிதை

வ.உ.சி.யின் தன் வரலாறு முழுமையும் அவரது சிறை வாழ்க்கையை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. அதில் தம்மை அரசியல் அறிஞராகவா, இலக்கியச் செம்மலாகவோ வெளிப்படையாகக் காட்டாமல் தம் வரலாற்றை மட்டுமே குறிப்பிட்டுக் காட்டுகின்றார். வ.உ.சி.

151 பக்கங்களில் வெளிவந்துள்ள, முற்றிலும் அகவற்பாவால் அமைந்த வ.உ.சி.யின் 'சுய சரிதை' 1946 இல் சென்னை முல்லைப் பதிப்பகத்தினரால் முதன் முதலில் வெளியிடப்பட்டது. இரண்டாவது பதிப்பு 1955 இல் பாரி நிலையத்தாரால் வெளியிடப்பட்டது. சைவ சித்தாந்த நூற் பதிப்பகக் கழகத்தார் 1990 களில் ஏழாம் பதிப்பு வரை வெளியிட்டுள்ளனர். தற்போது எண்ணூர் அசோக் லேலண்ட் தொழிலாளர் சங்கம் அதனை வழக்கறிஞர் வ.உ.சி. ஆ.சண்முகசுந்தரத்தின் துணையோடு பதிப்பித்துள்ளது. வ.உ.சி.யின் கவிதை நூற்களான 'மெய்றமும்', சுய சரிதையும் பல பதிப்புக்களைக் கண்டுள்ளது.

கவிதைத் திறன்

தமிழ் இலக்கிய இலக்கணப் புலமை பெற்ற வ.உ.சி. படைப்பாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும், மொழி பெயர்ப்பாசிரியராகவும் பணியாற்றித் தமிழ் மொழிக்குப் பெருந்தொண்டாற்றியிருக்கிறார். வ.உ.சி.சிறந்த கவிஞர். பார் அதிரக் கவி பாடிய பாரதியாரைப் போல தேசியப் பாடல்களைப் புனைந்திட வ.உ.சி. நாட்டம் கொள்ளவில்லை; பண்டையத் தமிழ் மரபுக் கவிஞராகவே வ.உ.சி. விளங்கினார்.

பாடற்றிரட்டு

வ.உ.சி.யின் கவிதைத் திறன் அவருடைய 'பாடற்றிரட்டு' எனும் தனிப்பாடல்களின் இரு பாகங்களிலும், அவரது சுயசரிதையிலும், 'மெய்யறம்' எனும் நூலிருந்தும் காண முடிகிறது. 381 பாக்களை உடைய 'பாடற்றிரட்டு' 1915 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.அகிலம் போற்றும் அரசியல் தலைவராகவும், அறிஞர் பெருமகனாராகவும், விடுதலைப் போராட்ட வீரராகவும் புகழ் வாய்ந்த புனிதராகவும் வாழ்ந்திட்ட திருவிளக்கு, தென் தமிழகம் தந்த தவப்புதல்வர் வ.உ.சி.

அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து வலிமை வாய்ந்த குரலை எழுப்பிய வ.உ.சி.யின் மங்காப் புகழ் அழியாது நிலை நிற்க வேண்டுமென்ற ஆவலிலும், காலகதியில் வ.உ.சி.யின் நூற்கள் மறைந்துவிடக் கூடாததென்ற ஆதங்கத்திலும் வ.உ.சி.யின் நூற்கள் அச்சில் வராத **'அழகும் ஆரோக்கியமும்'** என்ற கட்டுரைகளைத் தேடி எடுத்துப் பதிப்பித்தேன். அது போன்றே **'துன்பத்தின் கற்பனை'** என்ற கட்டுரைத் தொகுப்பையும் வெளியிட்டேன்.

1927 இல் சேலம் ஜில்லாவில் நடைபெற்ற மூன்றாவது அரசியல் மாநாட்டில், செக்கிழுத்த செம்மல் வ.உ.சி. ஆற்றிய உரையினை 'சேலம் அரசியல் மகாநாட்டில் எனது பெருஞ்சொல்' என்று எட்டாணா விலையில் வ.உ.சி. வெளியிட்ட நூலை **'வ.உ.சி.யின் அரசியல் பெருஞ்சொல்'** எனும் நூலாக மறுபதிப்புச் செய்தேன்.

பரலி சு. நெல்லையப்பர்

ஈரோட்டுப் பகலவன், சுயமரியாதை இயக்கப் பிதா, தந்தை ஈ.வெ.ரா. அவர்களுக்கும், கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி.க்கும் இடையே நிலவிய நட்பை, உறவை விவரித்திடும் வண்ணம் **'வ.உ.சி.யும் பெரியாரும்'** எனும் நூலாக எழுதி வெளியிட்டேன். தேசீயத்தின் மூச்சுக் காற்றாய், வெள்ளை இருட்டை விரட்டத் தோன்றிய சுதந்திர வீரர்களின் தாரக மந்திரமாய்த் திகழ்ந்த வ.உ.சி. அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே அவர்களது புகழினைப் பாடிய முன்னோடிகளின் பாடல்களை **'வ.உ.சி. புகழ் பாடிய முன்னோடிகள்'** எனும் நூலாகத் தொகுத்து வெளியிட்டேன்.

வ.உ.சி.யின் வாழ்க்கைச் சரிதத்தை 1940 களிலேயே தந்த பெருமைக்குரியவர் பரலி சு. நெல்லையப்பர். அறுபது ஆண்டுகளுக்கு முன் அவர் தந்த **'வ.உ.சிதம்பரம் பிள்ளை சரித்திரம்'** எனும் நூலினைப் பதிப்பித்தும், பரலி சு.நெல்லையப்பரின் வாழ்க்கைச் சரிதத்தையும் எழுதியும், அதனை **'வ.உ.சி.யும் பரலி சு. நெல்லையப்பரும்'** எனும் நூலாக வெளியிட்டேன்.

வ.உ.சி. இலக்கியப் பேரவை - நெல்லை

வ.உ.சி.யின் 'பாடற்றிரட்டு' நூலினை மறுபதிப்புச்செய்து வெளியிட வேண்டுமென்ற அவாவில் இருந்த எனது எண்ணத்தினை செயல் வடிவமாக்கியவர் நெல்லை வ.உ.சி. இலக்கியப் பேரவையின் நிறுவனர் அண்ணன் திரு.**இல. இராமகிருஷ்ணன்.** அவரும் புரெபசெனல் கூரியர் உரிமையாளர் திரு.**எஸ். மேகலிங்கம்** ஆகியோர் காட்டிய உற்சாகத்தால்

வ.உ.சி.யின் 'பாடற்றிரட்டு' நூல் ஏறத்தாழ 85 ஆண்டுகளுக்குப் பின், **'வ.உ.சி. பாடல்கள்'** எனும் நூலாக தமிழகத்தில் மீண்டும் உலா வந்தது.

1946 இல் வ.உ.சி.யின் புதல்வர் வ.உ.சி.சுப்பிரமணியம் அவர்கள் வெளியிட்ட 'வி.ஒ.சி. கண்ட பாரதி' எனும் வ.உ.சி.யின் நூலினை வ.உ.சி. பிறந்த வெளியீடாக தூத்துக்குடி மாவட்டம், புதுக்கோட்டை சகோதரர். **P.செல்வம்,**M.A., அவர்களின் உதவியுடன் **வ.உ.சி.யின் வி.ஓ.சி. கண்ட பாரதி** எனும் நூலாக வெளியிட்டேன் (5.9.200)

வ.உ.சி.யின் முதல் மனைவியான திருமதி. வள்ளியம்மை அவர்களின் சரித்திரத்தினை (1915 இல் முதற்பதிப்பு) மீண்டும் வ.உ.சி. நினைவு தின வெளியீடாக **'வ.உ.சி.யின் வள்ளியம்மை சரித்திரம்'** எனும் நூலாக 18.11.2000 வெளியிட்டு மகிழ்ந்தோம். அண்ணன் இல. இராமகிருஷ்ணன் அவர்கள் எனது பணிகளை அவ்வப்போது ஊக்கப்படுத்தி வருகிறார்கள்.

வ.உ.சி.யும் தொல்காப்பியமும்

தமிழர்களின் இரு கண்களெனப் போற்றற்குரியன திருக்குறளும் தொல்காப்பியமும். திருக்குறள் மணக்குடவர் உரையினைப் பதிப்பித்து வெளியிட்டவர் வ.உ.சி. அதுபோல் பண்டைத் தமிழர்களின் தூய நல்லறத்தைத் துணையாகப் பெற்று வாழ்ந்த முறையையும் வாழ்வின்பம் துய்த்ததற்குச் சிறப்புறு கருவியாய்த் துணைபுரிந்த தமிழ்மொழியின் இயல்பையும் எடுத்துக்காட்டி இசைத்திடும் தொல்காப்பியத்தின் இளம்பூரணர் உரை, பொருளதிகாரத்தின் அகத்திணை, புறத்திணை இயல்கள், பொருளதிகாரத்தின் பின் ஏழு இயல்களையும் பதிப்பித்து வெளியிட்டு மகிழ்ந்தவர் வ.உ.சி. தேசபக்தச் செம்மலாக மட்டுமின்றி, தொல்காப்பியத்தின் இளம்பூரணர் உரையினைப் பதிப்பித்து வெளியிட்ட, தமிழ் இலக்கிய ஆர்வலராகவும் மிளிர்ந்திட்ட தமிழறிஞர் வ.உ.சி. அவர்கள் ஆற்றிய அருஞ் சேவையினை விவரிப்பது **'வ.உ.சி.யும் தொல்காப்பியமும்'** என்னும் இச்சிறு நூல்.

சைவநெறி P. காந்தி

தூத்துக்குடி சுதந்திரப் போராட்டவீரர் அமரர் சூ.பிரமநாயகம்பிள்ளை, வெள்ளமடம் அமரர் பி.இராமசாமிபிள்ளை ஆகியோரின் பேத்தியும், சைவநெறி பி.காந்தி - ஆர். வள்ளியம்மாள் என்ற பாமா அவர்களின் புதல்வி திருவளர்ச்செல்வி கா.**சொர்ணதேவி,** பி.காம்., டி.டி.பி. சைவநெறி ஆசிரியர் மா.பிரமநாயகம் அவர்களின் சகோதரர் திருவளர்ச்செல்வன் **மா.அகஸ்தீஸ்வரன் (எ) குமார்,** பி.ஏ., ஆகியோர் திருமணப் பரிசாக இந்நூலை வெளியிட எனக்கு உதவிய நண்பர்களுக்கும், இறைவனுக்கும் நன்றியினைச் செலுத்துகிறேன்.

- செ. திவான்.

தொல்காப்பியரும் தொல்காப்பியமும்

தொல்காப்பியம் என்பது ஐமதக்கினியின் புதல்வரான திரணதூமாக்கினி யென்னும் மஹரிஷியால் இயற்றப்பட்டது; இவர் அகத்தியரின் மாணாக்கர் பன்னிருவரில் சிறந்தவர் என்பர்.

அகத்தியர்

திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியரை நோக்கி அகத்தியர், 'நீர் சென்று எனது மனைவியாகிய குமரியாரை அழைத்து வருக' என்று கட்டளையிட்டார். அதற்கு தொல்காப்பியர் 'எம் பெருமாட்டியை எவ்வாறு அழைத்து வருவது?' என்று கேட்டார். அதற்கு அகத்தியர் 'முன்னாகப், பின்னாக நாற்கோல் நீளம் அகலம் நின்று அழைத்து வருக' என்றார்.

அவ்வாறு தொல்காப்பியர் அகத்திய முனிவரது துணைவியாரை அழைத்து வந்தபோது, வையை நீர் அவரை ஈர்த்துக் கொண்டு போக முற்பட்டது. உடனே தொல்காப்பியர் முனிவரது கட்டளையை மீறி, ஒரு மூங்கிற்கோலை முரித்து நீட்டினார். அதனைப் பிடித்துக் கொண்டு அகத்தியரது துணைவியார் கரையேறினார். இதனையறிந்த அகத்தியனார் அது குற்றமென்று குமரியாரையும், தொல்காப்பியனாரையும் சபித்தார்.

உடனே அவர்கள், 'நாங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லையே; இந்த நிலையில் எங்களைச் சபித்தமையால், அகத்தியரும் சுவர்க்கம் புகாதிருக்கட்டும்' என்று பதிலுக்குச் சபித்தனர். அதனால் (அகத்தியர்) கோபித்து, 'தொல்காப்பியன் செய்த நூலை அதங்கோட்டாசிரியரைக் கேளற்க' என்று கூறியவர் அகத்தியர்★ என்ற குறிப்புக் காணப்படுவதால், அகத்தியர் காலத்தில் வாழ்ந்தவர் தொல்காப்பியர் என்று அறியப்படுகிறது.

சிறப்புப்பாயிரம்

பனம்பாரனார் சொன்ன, தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்தில்,

'மல்கு நீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றிப் ...' என்று வருகிறது.

அதாவது, 'மிக்க நீரையுடைய கடலாகிய எல்லையைக் கொண்ட உலகின்கண், இந்திரனால் இயற்றப்பட்ட ஐந்திரத்தைக் கற்று, நிறைந்த அறிவு பெற்றுச் சிறந்தோரும், பழைய காப்பியக் குடியினர்' எனத் தம் பெயரை

★ ஆ. சிங்கார வேலு முதலியார், அபிதான சிந்தாமணி, சென்னை 1991, பக்4.

இவ்வுலகில் நிலைபெறச் செய்தவர் தொல்காப்பியர்★ எனச் சிறப்புப்பாயிரம் குறிப்பிடுகிறது.

நச்சினார்க்கினியர்

தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்தில், கூறப்படும் 'நான்மறை' என்பது தைத்திரியம், பௌடிகம், தலவகாரம், சாமவேதம் என்பனவற்றையே குறித்தலின் வேத வியாஸர் காலத்திற்கு முன்னரே தொல்காப்பியனார் இருந்தார் என்று சிறப்புப்பாயிர உரையில் குறிப்பிடுவர் நச்சினார்க்கினியர்.

சுப்பிரமணிய சாஸ்திரி

'தைத்திரியம், பௌடிகம், தலவகாரம், சாமவேதம் என்ற பிரிவு கி.பி. ஆறேழு நூற்றாண்டுகட்குப் பிற்பட்ட சாஸனங்களிலுங் காணப்படுதலானும், பௌடிகம் என்பது ருக் வேதத்தைக் குறிக்கும். 'பஹ்வ்ருச்சியம்' என்ற வடமொழியின் தற்பவமாகலானும், அச்சொல் நாலாயிரப்பிரபந்தம் (சந்தோகா! பௌழியா ... (பெரிய திருமொழி 7, 2) முதலிய நூல்களில் வழங்கப்படுகின்ற தானும், தலவகாரம் என்பது ஸாம வேதத்தின் ஒரு சாகையாதலானும், பாயிரத்துள் உள்ள நான்மறை என்பது அவற்றைக் குறிக்குமென்றும், அக்காரணம் பற்றி வேத வியாஸர் காலத்துக்கு முற்பட்டவர் தொல்காப்பியனார் என்றுங் கூறுதல் பொருத்தமின்று' என்பர் வித்யா ரத்தினம் டாக்டர் P.S. சுப்பிரமணிய சாஸ்திரி★★

சி. இலக்குவனார்

'அதர்வணவேதம் ஒரு வேதமாக ஒப்புக்கொள்ளப்பட்டு நான்கு வேதங்கள் என்ற எண்ணிக்கை மிகமிகப் பிறப்பட்ட காலத்தில் தான் ஏற்பட்டது என்று வரலாற்றாசிரியர் R.C. தத்தர் (R.C. Dutt) குறிப்பிடுகிறார் (Early Hindu Civilization P. 116). ஆதலின் மிக முற்பட்ட நூலான தொல்காப்பியப்பாயிரத்தில் நான்மறை என்று சுட்டப்பட்டது ஆரிய நான்கு வேதங்களாக இருத்தல் இயலாது என்பர் டாக்டர் சி. இலக்குவனார்.★★★

இறையனார் அகப்பொருள்

அகத்தியனார், சிவபிரான், முருகன், முரிஞ்சியூர் முடிநாகராயர், நிதியின் கிழவனும் ஆகியோர் தலைச்சங்கத்தில் இருந்தவர்கள்;

★ தொல்காப்பியம், புலியூர்க்கேசிகன் தெளிவுரை, சென்னை, *1980*, பக் *16*.

★★ தொல்காப்பியம், எழுத்ததிகாரம், திருச்சி, *1937*, முகவுரையில்.

★★★ தொல்காப்பிய ஆராய்ச்சி, புதுக்கோட்டை, *1971*, பக் *19*.

அகத்தியரும், தொல்காப்பியரும், இருந்தையூர் கருங்கோழி மோசியும், வெள்ளூர்க் காப்பியனும், சிறுபாண்டரங்கனும், திரையன்மாறனும், துவரைக்கோமானும், கீரந்தையும், இடைச்சங்கத்தில்இருந்தவர்கள் என்று இறையனார் அகப்பொருள் முதற் சூத்திர உரையிற் கூறப்பட்டுள்ளது.★

முச்சங்கங்கள்

''மூன்று சங்கங்கள் இருந்தன; அவை இன்னார் இன்னார் தலைமையில் இத்தனை இத்தனை ஆண்டுகள் இருந்தன என்றெல்லாம் பிற்கால அறிஞர்கள் கூறும் கருத்துக்களுக்குப் போதுமான சான்றுகள் இல்லை.''★★ என்பர் மு.வ.

எனவே முச்சங்கங்களைப் பற்றிய அளவில் புதிய சான்றுகள் வெளிப்படாத நிலையில், முச்சங்கங்களின் செய்திகளை மீண்டும் சிந்திப்பது பயனுடையதாகாது★★★ என்பர் அருணாசலம்.

சங்ககால வரலாறு

தமிழுக்குச் சார்பான கருத்துக்கள் வெளிவந்தால் அவைகளை எதிர்த்துப் போராடும் ஒரு கூட்டத்தினர் என்றென்றும் தமிழ்நாட்டில் இருந்து வந்துள்ளனர்; அவருட் சிலர் சங்க நிகழ்ச்சி உண்மை வரலாறே; ஆனால் அது ஆரியமுனிவர் தலைமையில் நடைபெற்றதெனக் கூறி மகிழ்ந்தனர். இறுதியில் சங்ககால நிகழ்ச்சிகள் மறுக்க முடியாத உண்மை வரலாறாக நிலைபெறுவதாயிற்று என்பதனை எவரும் மறுத்திட முடியாது.

ந.சி. கந்தையா பிள்ளை

'தொல்காப்பியர் சமதக்கினியின் புதல்வர் என்பதும், அவர் பெயர் திரணதூமாக்கினி என்பதும் கற்பனைகளேயாகும்; தொல்காப்பியர் அகத்தியரின் மாணாக்கர் என்னும் வரலாறும் ஒன்றுள்ளது. தொல்காப்பியத்துக்குச் சிறப்புப்பாயிரம் செய்த பனம்பாரனார், தொல்காப்பியர் அகத்தியரின் மாணவரென்றோ, அல்லது இவர் அகத்தியத்தைப் பின்பற்றி நூல் செய்தாரென்றோ கூறவில்லை. தொல்காப்பியரும் அவ்வாறு எங்கும் கூறவில்லை. அகத்தியர், தொல்காப்பியரை வடநாட்டுப் பிராமணரோடு தொடர்புபடுத்தும் புதியகதைகள் தோன்றிய பின்பே இவ்வகைக் கதைகள் தோன்றியிருக்கலாம்' என்பர் ந.சி. கந்தையாபிள்ளை★★★★

★ நக்கீரனார் அருளிய களவியல் என்ற இறையனார் அகப்பொருள், சென்னை, 1953, பக் 5.
★★ தமிழ் இலக்கிய வரலாறு, சென்னை, 1980, பக் 29.
★★★ தொல்காப்பியர், சென்னை, 1975, பக். 13.
★★★★ முச்சங்கம், சென்னை, 1947, பக்கம் 45, 46

தொல்காப்பியர் காலம்

குமரிமுனைக்குத் தெற்கேநிலப்பகுதி பரந்திருந்த காலத்தில் வாழ்ந்தவர் தொல்காப்பியர் என்பர் மறைமலையடிகள் ★ தொல்காப்பியர் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பர் எஸ். வையாபுரிப்பிள்ளை ★★

'சங்க இலக்கியங்களுக்கு மரபு வகுத்துக் கொடுத்தது தொல்காப்பியம். தொல்காப்பிய மரத்தைச் சுற்றி சங்க இலக்கியக் கொடி பின்னிப் படர்ந்தது என்பதே சரியாகும் என்பதால், சங்க இலக்கியங்களுக்கு முற்பட்டது தொல்காப்பியம். தொல்காப்பியப் பொற்பேழையில் இருக்கும் சங்க இலக்கிய வைரம் உலகம் எங்கும் மின்னொளி வீசுகின்றது' என்று தொல்காப்பியர் காலம் குறித்து ஆய்வு செய்வர் தமிழோவியன் ★★★

'பல்லாயிரம் ஆண்டுகள் இடைவெளியில் பலரும் பதவிதமாக தொல்காப்பியரது காலத்தைக் குறித்து ஆய்வு செய்வது ஆராய்ச்சியல்ல' என்பதால் அதனைத் தொடாரது நிறுத்துவோம்.

எவ்வாறாயினும், தொல்காப்பியம் இன்று நம்மிடையே உள்ளது; இந்நூல் செய்தவரின் பெயர் தொல்காப்பியர் என்றும் அழைக்கப்பட்டு வருகிறது என்பதோடு நின்று அந்நூலுக்கு உரை செய்தவர்கள் பற்றிய செய்திகளுக்கு வருவோம்.

சிறப்பான உரைகள்

தொல்காப்பியத்திற்குப் பல உரைகள் தோன்றியிருப்பினும் சில உரைகளே போற்றிப் பயிலப்பட்டு வருகின்றன. எழுத்ததிகாரத்திற்கு இளம் பூரணர் உரையும், சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையர் உரையும், பொருளதிகாரத்தின் முன் ஐந்து இயல்களுக்கு நச்சினார்க்கினியர் உரையும், பின் நான்கு இயல்களுக்குப் பேராசிரியர் உரையும் பயில்வது வழக்கமாக உள்ளது.

கல்லாடர், தெய்வச்சிலையார் சொல்லதிகாரத்திற்கு இயற்றிய உரைகளும், பேராசிரியர் பொருளதிகாரத்திற்கும் இயற்றிய உரைகளும் உண்டு★★★★

★ *மாணிக்கவாசகர் வரலாறும் காலமும், பக் 742.*

★★ *தமிழ்ச் சுடர்மணிகள், சென்னை, 1959, பக்கம் 54.*

★★★ *தொல்காப்பியர் காலம், சென்னை, 1963, பக்கம் 19.*

★★★★*க. வெள்ளைவாரணார், தொல்காப்பியம்-நன்னூல் எழுத்ததிகாரம், அண்ணாமலைப் பல்கழைக்கழகம், 1970, பக்கம் 5.*

இளம் பூரணர்

"பிறர் உட்புகுந்து காணமுடியா வண்ணம் இருண்டு கிடந்த தொல்காப்பியம் என்னும் சரக்கறையுள் தம் அறிவென்னும் அவியா விளக்கைக் கொண்டு துருவி, ஆங்கே குவிந்து கிடந்த அரதனக் குவியல்களை உலகிற்கு முதலில் விளக்கிக் காட்டிய பெருந்தகையார் இளம் பூரணர் ஆவார்★ இவரது காலம் 12ஆம் நூற்றாண்டு என்று சொல்லப்படுகிறது. இனி பிற்காலத்தில் நிகழ்ந்த தொல்காப்பிய ஆராய்ச்சிகளுக்கு வருவோம்.

சிவஞான முனிவர்

பதினேழாம் நூற்றாண்டில் மீண்டும் தொல்காப்பிய ஆராய்ச்சி தொடங்கியது. இதனைத் தொடங்கி வைத்தவர் சிவஞானமுனிவர். திருநெல்வேலி மாவட்டம் விக்கிரமசிங்கபுரத்திலே சைவ வேளாளர் குலத்திலே ஆனந்தக் கூத்தர்-மயிலம்மையார் தம்பதியருக்குப் புத்திரராக, முக்களாலிங்கர் என்ற பெயருடன் பிறந்தவர் சிவஞான முனிவர். இவர் தொல்காப்பியப் பாயிரம், முதல் சூத்திரம் இரண்டிற்கும் விருத்தியுரை எழுதினார். இவ்விருத்தியுரை (தொல்காப்பியச் சூத்திர விருத்தி) இலக்கண ஆராய்ச்சிக் கருவூலமாய்த் திகழ்ந்து வருகின்றது. (இவர் 17.4..1785 இல் மறைந்தார்) ★★

சோழவந்தான் அரசன் சண்முகனார்

சிவஞான முனிவரை அடுத்து சோழ வந்தான் சு. அரசப் பிள்ளையின் புதல்வர் சோழ வந்தான் அரசன் சண்முகனார் (1868-1911) தொல்காப்பியப் பாயிரத்திற்கும், முதற் சூத்திரத்திற்கும் விருத்தியுரை எழுதினார். அது தொல்காப்பியம் பாயிரவிருத்தி என்னும் நூல் ஆகும்; இது 246 பக்கங்களைக் கொண்டதாகும். (22 பக்க விஷய சூசிகையோடு வெளிவந்த இந்த நூல் இரண்டு ரூபாய் விலையில் அப்போது விற்பனையானது)

அரசன் சண்முகனார் எழுத்ததிகாரத்தில் நூன்மரபு, மொழிமரபு, என்ற இருபகுதிகளுக்கும் உரை எழுதினார் எனறும் இவ்உரைப்பகுதிகள் கிடைக்கவில்லை என்றும் கூறுவர் ★★★

தொல்காப்பியம்

தமிழில் தோன்றிய முதல் நூல்; முதன்மையான நூல் தொல்காப்பியம்; இலக்கண நூலான தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்ற

★ மு.ராகவயங்கார், ஆராய்ச்சித் தொகுதி, 1948, பக்கம் 398.

★★ ந.சி. கந்தையா பிள்ளை, தமிழ்ப் புலவர் அகராதி, சென்னை, 1906, பக்.169-172

★★★ தொல்காப்பியச் செல்வம், 1965, பக்கம் 113.

முப்பெரும் பிரிவுகளாகவும், ஒவ்வொரு பிரிவுக்கும் ஒன்பது இயல்களாக 27 இயல்களையும் கொண்டுள்ளது. எழுத்தும், சொல்லும் மொழிபற்றிய இலக்கணம். பொருள் இலக்கியம் தமிழ்ச்சமுதாயம், உளவியல், உடலியல், மரபு இவை பற்றிய இலக்கணம் ஆகும்.

மழவை மகாலிங்கையர்

திருவாவடுதுறைத் தாண்டவராய சுவாமிகளுக்கு முற்பட்டவர் மழவை மகாலிங்கையர்; 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். அருணாசல புராணத்துக்கு உரை எழுதியும் 'போதவாசகம்' என்னும் நூலை எழுதியும் தமிழ்த் தொண்டாற்றிய இவர் கி.பி. 1847 இல் தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியர் உரையை முதன்முதல் பதிப்பித்தார்; தொல்காப்பியம் அச்சில் வந்தது இப்பதிப்பின் மூலம் தான்.

எஸ். சாமுவேல் பிள்ளை

தொல்காப்பியம் முழுவதையும் கி.பி. 1858 இல் சாமுவேல் பிள்ளை என்பவர் வால்ற்றர்ஜாயீஸ் என்பவரது துணையுடன் வெளியிட்டார். நமக்குத் தொல்காப்பியம் மூலம் முழுவதும் அச்சில் கிடைத்தது இப்பதிப்பின் வழியாகத் தான்.

சி.வை. தாமோதரம் பிள்ளை

யாழ்ப்பாணத்து ஏழாலையில் கி.பி. 1832 இல் பிறந்தவர்; சுன்னாகம் முத்துக்குமாரக்கவிராயரிடம் கல்விகற்றவர்; வீரசோழியம், இறையனாரகப் பொருள், இலக்கண விளக்கம், சூடாமணி, கலித்தொகை, தணிகைப் புராணம் போன்றவற்றைப் பதிப்பித்தவர்; அதோடு முக்கியமாக கி.பி. 1885 இல் தொல்காப்பியப் பொருளதிகாரத்தை மிகத் தெளிவாகப் பதிப்பித்தவர் சி.வை. தாமோதரம் பிள்ளை ஆவார்.

ச. பவானந்தம் பிள்ளை

'காணாமற்போன கணையாழி' (சாகுந்தலம்) 'பாதுகாபட்டாபிஷேகம்' ஆகிய நூல்கள் எழுதியவர் ச. பவானந்தம் பிள்ளை. 20 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவரது தந்தை முத்துச்சாமிப் பிள்ளை; தாயார் சந்திரமதி. தமிழும் ஆங்கிலமும் கற்ற அறிஞரான இவர் தமிழரிடத்தும் தமிழ் மொழியிடத்தும் அளவற்ற அன்பு கொண்டிருந்தவர். தமது சொந்தப் பொருளால் தமிழ் நூற்கள் பலவற்றை பதிப்பித்த இவர், தொல்காப்பியம் பொருளதிகாரத்தை நச்சினார்க்கினியர், பேராசிரியர் உரையுடன் வெளியிட்டவர் ★

★ வெ. பழநியப்பன், உ. பழநி, தமிழ்ப்புலவர் வரலாற்றுக் களஞ்சியம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1989, பக்கம் 309, 310.

கா. நமச்சிவாய முதலியார் (கி.பி. 1876-1937)

கா. நமச்சிவாய முதலியார் பள்ளிக்ககூடப் பாடப்புத்தகங்கள் பலவற்றை வெளியிட்டதோடு, தமிழ்ப்புலவர்களை ஆதரித்தவர் ஆவார். இவர் தொல்காப்பியம் இளம்பூரணம் சொல்லதிகாரம், அகத்திணை, புறத்திணை இயல்களை 1920 களில் வெளியிட்டவர் ஆவார்.

தமிழறிஞர் வ.உ.சி.

இந்தக் காலக்கட்டத்தில் அகிலத்தில் தமிழரின் பெருமையை தரணிக்குணர்த்திய தகைசால் தலைவர், கப்பலோட்டிய தமிழர், செக்கிழுத்த செம்மல், வ.உ.சி. தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரையினைப் பதிப்பித்து வெளியிட்டார். அப்போது துவங்கி 1935 ஆம் ஆண்டு வரையில் தொல்காப்பியத்தின் பல்வேறு பதிப்புக்களை வெளியிட்டுக் கொண்டே வந்துள்ளார் தமிழறிஞர் வ.உ.சி.; இதோ அந்த சரித்திரம்...

வ.உ.சி.யும் தொல்காப்பியமும்

அரசியல் உலகில் அஞ்சா நெஞ்சராகத் திகழ்ந்த வ.உ.சி. தமிழ்இலக்கிய உலகில் ஆற்றிய அருந்தொண்டினை அகிலம் முழுமையாக அறிந்திட வில்லையெனலாம். அதிலும் குறிப்பாக மிகப்பழமையும் பெருமையும் வாய்ந்த தமிழ்நூலான தொல்காப்பியத்தினைப் பதிப்பிப்பதற்கு வ.உ.சி. ஆற்றிய அருஞ்சேவைக்கு அன்னைத் தமிழகம் பெரிதும் நன்றிக் கடன் பட்டுள்ளது.

சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார்

தொல்காப்பிய எழுத்ததிகார இளம்பூரணர் உரையை முதன் முதலில் வெளிக்கொணர்ந்தவர் சோடசாவதானம் (பதினாறு வித அவதானஞ் செய்வோர்) த.க. சுப்பராயச் செட்டியார் ஆவார். திருவதிகை வீரட்டானம் பெரிய நாயகியம்மையார் பிள்ளைத் தமிழ் பாடியவர் இவர். திரிசிரபுரம் மஹா வித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் மாணவர்களில் தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதையரும், இவரும் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

சு. கன்னியப்ப முதலியார்

தொல்காப்பியம் எழுத்ததிகாரம், இளம்பூரணர் உரையை முதன்முதலில் பதிப்பித்தவர் பூவிந்தவல்லி சு. கன்னியப்ப முதலியார் ★

★ கு. சுந்தரமூர்த்தி, தொல்காப்பியம், எழுத்ததிகாரம், இளம் பூரணம், திருப்பனந்தாள், 1969, பக்கம் 6.

இந்நூலுக்கு திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, தியாகராசச்செட்டியார், திரிசிரபுரம் பெரியண்ணப்புலவர் ஆகியோர் சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளனர். கி.பி. 1898 இல் வெளிவந்த இதன் உரை பொழிப்புரையாகக் காணப்படுகின்றது. அதன்பின் திரு. வ.உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் இப்பொழிப்புரையைத் தழுவிப் பதவுரையாக்கி வெளியிட்டுள்ளார்கள் ★

1910-1936

வ.உ.சி. தம் விடா முயற்சியால் கி.பி. 1910 இல் தொல்காப்பியத்தைப் படிக்கத் துவங்கி, 1921 இல் பொருள்-அகத்திணையியல் புறத்திணையியலை வெளியிட்டு, 1928 இல் எழுத்தை வெளியிட்டு, 1933இல் பொருள்-களவு, கற்பு, பொருள் இயல்களை (ஒரு தொகுதியாகவும்) வெளிப்படுத்தி, 1935 இல் பொருள் இறுதி நான்கு இயல்களையும்(மெய்ப்பாட்டியல்,உவமையியல், செய்யுளியல், மரபியல்) வெளியிட்டுள்ளார். இவற்றை எண்ணிப்பார்க்கும் போது ஏறத்தாழ 1910 முதல் 1935 வரை இருபத்தைந்து ஆண்டுகள் தொல்காப்பியம் பற்றி நினைத்துக் கொண்டிருந்தார் வ.உ.சி. என்பது தெளிவாகிறது என்பர் அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் ★★

பொய்கையாரின் இன்னிலை

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான, பொய்கையாரின் இன்னிலையை கி.பி.1918ல் (பிங்கள வருஷம் ஆடி மாதம்) விருத்தியுரையுடன் வெளியிட்டவர் வ.உ.சி. அதில் இன்பப்பாலில்,

'அளகு மளிநாகைப் பேண வணியா
ரழகரிவை வீழ்முயக்கை யண்ணுத் - தளியாளர்
பெற்ற பிறக்கெறிந்து புத்தாய பெட்டுழலும்
பெற்றியர் பெட்ட கழுது' எனும் பாடலுக்கு **'சேவலும்** அன்பையுடைய (தனது) பெட்டையைக் (கூடிவாழ்ந்து) இன்பமுற, அணிகளையும் அழகையும் பொருந்திய அரிவையரை விரும்பிக் கூடும் கூட்டத்தை விரும்பாத சாப்பாட்டுப் பிரியர், தம் கையில் பெற்ற அரிய பொருள்களைப் பின்னால் எறிந்துவிட்டுப் புதிய பொருள்களைப் பெற விரும்பித் துன்பம் உறும் தன்மையராவர். அவர் (பெற்ற பொருள்களை அநுபவியாது மேலும் மேலும் பெற விரும்பும்) ஆசைமிக்க பேயை ஒப்பர்' என்று பொழிப்புரையாகத் தந்துள்ளார்... ★★★

★தொல்காப்பியம், எழுத்ததிகாரம், இளம் பூரணர் உரையுடன், கழக வெளியீடு, 1981 பக்கம் 4.

★★ தொல்காப்பியப் பதிப்புகள், சென்னை, 1992, பக்கம் 93.

★★★ வ.உ.சிதம்பரம்பிள்ளை, இன்னிலை, அம்பாசமுத்திரம், 1930, பக்.87,88

செந்தமிழ்

தமிழறிஞர் ரா. இராகவய்யங்கார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு மதுரையிலிருந்து கி.பி. 1902 இல் வெளிவந்த இதழ் செந்தமிழ். சேதுபதி மன்னரால் தொடங்கி வைக்கப்பட்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் வெளியிடப்பட்டு வரும் இலக்கிய மாத இதழ் இது★ 1918 டிசம்பர்-ஜனவரியில் தொகுதி 16, பகுதி 2 ஆக வெளிவந்த செந்தமிழ் இதழில், பக்கம் 105 இல் தமிழ் மாணவன் என்ற பெயரில் ஒரு 'ஐயவினா' பிரசுரமானது. இதோ அந்த ஐயவினா...

ஐயவினா ?

அருண்மயம் - தொல்காப்பியன் றுணை

''இன்னிலை' என்ற நீதிநூல் ஒன்று பார்வையிட்டேன். அதில் வரும் 31ம் பாட்டு 'அளகு மளிநாகைப்பேண வணியா' என்ற அடியை முதலாக உடைய ஒருவெண்பாவாகும். அந்நூல் உரைகாரர் ஸ்ரீ.வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்கள் 'அளகு' என்றதற்குச் சேவல் என உரை கூறியுள்ளார்கள். தொல்காப்பியமரபியல் 55ம் சூத்திரத்தில் 'அளகு' என்னும் சொல், பெண்பாற்பெயராக எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றது. 'சேவல்' ஆண்பாற் பெயரன்றோ? ஆகவே 'அளகு' என்றற்குச் 'சேவல்' என்று கூறும் வழக்கம் உண்டா என்பது ஐயம். சொற்பொருள் உணர்ந்த பெரியார் இவ்வையங்களையுமாறு வேண்டுகின்றேன்''. - தமிழ்மாணவன் - என்ற பெயரில் இது வெளிவந்தது.

அ. குமாரசுவாமிப்பிள்ளை

'பவானிப்பதிற்றுப்பத்தந்தாதி' நூல் பாடியவர் பவானி அ.குமாரசுவாமிப் பிள்ளை; இவர் செந்தமிழ் தொகுதி 16, பகுதி 4 (பிப்ரவரி-மார்ச் (1918) பக்கம் 169 இல் 'ஐயவினாவுக்கு விடை'யென்று மேற்கண்ட ஐயத்திற்குப் பதில் தந்துள்ளார். அந்தப் பதில் இதோ...

'அளகு என்பது கோழி, கூகை என்னும் பறவைகளின் பெண்பாலை உணர்த்துமொரு மரபுப்பெயர். அஃது ''அயர்வுறுகோழிகூகை யல்லாப் பெண்ணளகொன்றோதார்'' என்னும் சூடாமணிநிகண்டினாற் பெறப்படும். இவைகளையன்றி மயிற்பேடையையும் உணர்த்தும் என்று தொல்காப்பியர் கூறுவர். ''மனையுறையளகின்வாட்டொடும் பெறுகுவிர்'' (பெரும்பா)

★ மா.சு. சம்பந்தன், தமிழ் இதழியல் வரலாறு, சென்னை, 1987, பக்கம் 59.

என்பதைக் கோழிப்படைக்கும், ''அளகு சேவலொடி'' (சிந்தா) என்பதைக் கூகைப்பேடைக்கும் இலக்கியமாகக்கொள்க. மயிற்பேடைக்கு இலக்கியங்கண்டிலம்.

இந்நியமந்தவறி இரகுவமிசகாரர் அன்னப்பேடைக்கும் வழங்குவர். ''ஆதகா வென்ன வன்ன மயல்செல வளகு மாடே'' என்பது இரகுவமிசம், கந்தபுராணகாரர் பறவைப் பேடைகட்குப் பொதுவாகவும் வழங்குவர். ''அளகைநேடிப்பார் வல்வந்தணையுமாபோல்'' என்பது கந்தபுராணம். திருவிளையாடற்புராணகாரர் சேவற்கோழிக்கும் வழங்குவர். ''அளகைப்பொறித்தகொடியிளையோன்'' என்பது திருவிளையாடற் புராணம். விதியிருத்தல்வேண்டும் என்பது அநுமானிக்கப்படும்'' என்று பதில் தந்துள்ள செய்தியினை அறிகிறபோது, வ.உ.சி.யின் தமிழறிவின் மேல் 1918 இல் எழுந்த ஐயமும், அதற்கு இன்னொரு தமிழறிஞர் தந்த பதிலும், வ.உ.சி.யின் ஆழ்ந்த, தெளிந்த, இலக்கண, இலக்கியத் தமிழறிவை தெள்ளத் தெளிவாக நமக்கு உணர்த்துகிறது.

ஆழ்கடல்

''தொல்காப்பியம் ஓர் ஆழ்கடல்-அறிவுக்கடல்-பகுத்தறிவுக் கடல்-அவ்ஆழ்கடலில் மூழ்கிய பல பேரறிஞர் பல நன்முத்துக்களை, தொன்மைக் கருத்துக்களை அறிவுச் செல்வங்களை அள்ளி அள்ளி நமக்கு வாரி வழங்கியுள்ளனர். அதனைக் கற்கக் கற்க அறிவூற்றெழுகிறது; அறிவொளி வீசுகிறது'' என்பர் இரா. சண்முகம்★

மயிலைநாதர் இளம்பூரணரைத் 'துறவி' என்று குறிப்பிடுகிறார். தமிழ்க்கடலுள் பலகால் மூழ்கித் திளைத்த, தமிழ் மரபு நன்கு அறிந்த சான்றோர், ★★இளம்பூரணரது தொல்காப்பிய உரையினைப் பதிப்பித்து மகிழ்ந்தவர் வ.உ.சி; 1920களில் வ.உ.சி. தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்தையும், பொருளதிகாரத்தையும் அச்சிடத் துவங்கினார். ஆனால் பொருளதிகாரத்தின் அகத்திணையியலும், புறத்திணையியல்களும் தான் அப்போது 90 பக்கங்களைக் கொண்டு வெளிவந்தது.

★ தொல்காப்பியர், பொருளுக்கு இலக்கணம் வகுத்த தமிழ்ப்பெரியார், அங்கமங்கலம், 1960, பக் 1.

★★ மு.வை. அரவிந்தன், உரையாசிரியர்கள், சிதம்பரம், 1968, பக் 88, 89.

தொல்காப்பியம் - இளம்பூரணம் - வ.உ.சி.யின் பதிப்புரை

இது இப்பதிப்பிற்கு 60 ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த சோடசாவதானம்சுப்பராயச்செட்டியாரின் பதிப்பையும் ஏட்டுச் சுவடிகளையும் ஒப்பு நோக்கிப் பரிசோதிக்கப்பட்டது. இதன் மறுபதிப்புகள் *1936, 1941* ஆகிய ஆண்டுகளில் வெளிவந்துள்ளன. இந்நூலின் பதிப்புரையில் முந்தைய பதிப்புகள் சிலவற்றைப் பற்றியும், தொல்காப்பிய உரைகள் பற்றியும் பதிப்பாசிரியர் வ.உ.சி. குறிப்பிட்டுள்ளார். நூற்பா முதற்குறிப்பு அகராதியும், இயலகராதியும் நூலின் தொடக்கத்தில் தந்துள்ளார். நூற்பாவில் பொருள் விளங்குமாறு சந்தி பிரிக்கப்பட்டுத் தகுந்த நிறுத்தக்குறிகள் அமைக்கப்பட்டுள்ளன. மூலத்திலும், உரையிலும் காணப்படும் பாடவேறுபாடுகளைக் காட்டித் தம் சேர்க்கைகள் எவை என்பதை விளங்குமாறு அவற்றை அடைப்புகளுக்குள் வ.உ.சி. தந்துள்ளார்.★

1928 இல் எழுத்ததிகாரத்தின் இளம்பூரணருரையினை சிரமங்களுக் கிடையே பதிப்பித்து மகிழ்ந்தவர் வ.உ.சி; *160* பக்கங்களைக் கொண்ட அந்த நூலுக்கு அப்போது வ.உ.சி. எழுதிய பதிப்புரை இதோ.

''தொல்காப்பியம்'' என்னும் இந்நூல் தமிழ் மொழிக்குத் தலையாக விளங்கும் ஒப்புயர்வற்ற ஓர் இலக்கணம். இஃது அகத்தியனது பன்னிரு மாணாக்கருள் ''திரணதூமாக்கினி'' என்னும் இயற்பெயரினையும் ''பொருந்தக் கற்றுப்புரைதப வுணர்ந்தோர் நல்லிசை நிறுத்த தொல்காப்பியன்'' என்னும் புகழ்ப்பெயரினையும் கொண்டு விளங்கிய ஓர் முனிவனால் இயற்றப்பெற்றது. இதற்கு முதல் நூல் அகத்தியனால் இயற்றப்பெற்ற ''அகத்தியம்''என்ப. இந்நூல் பன்னீராயிரம் வருஷங்களுக்கு முன் இயற்றப்பெற்றதென வீரசோழியத்தின் பதிப்புரையில் திருமன். சி. வை. தாமோதரம்பிள்ளை நிலைநாட்டியுள்ளனர்.

ஆண், பெண், அலிகளை ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் விகுதிகளால் உணர்த்துவது தமிழ்மொழி ஒன்றே. ஆண்பால் விகுதியைப் பொருந்தி ஆணைக்குறியாமலும், பெண்பால் விகுதியைப் பொருந்திப் பெண்ணைக் குறியாமலும், ஒன்றன் பால் விகுதியைப் பொருந்தி அலியைக் குறியாமலும் நிற்கும் சொற்கள் ஆரியம் முதலிய மொழிகளில் எண்ணில

★ கோ. கிருட்டிணமூர்த்தி, தொல்காப்பிய ஆய்வின் வரலாறு, சென்னைப் பல்கலைக்கழகம், *1990*, பக். *19,20*.

உண்டு. உயர்திணை, அஃறிணை என்னும் தமிழ் இலக்கணப் பாகுபாடு ஆரியம் முதலியவற்றில் இல்லை. நிலத்தின் பாகுபாடுகளையும், அவற்றின் உரிப்பொருள், கருப்பொருள்களையும், அவற்றின் மக்களது ஒழுக்கங்களையும் கூறுவது தமிழ் இலக்கணம் ஒன்றே.

இவ்வகைத் தனிச் சிறப்புப் பொருந்திய இத்தமிழ் இலக்கணத்துள்ளும் ஆரிய மொழிகள் சிலவற்றையும், ஆரியர் பழக்கவழக்கங்கள் சிலவற்றையும், ஆரியர் கொள்கைகள் சிலவற்றையும் இந்நூலாசிரியன் நுழைத்திருத்தலை ஆங்காங்குக் காணலாம். ஆயினும், தமிழ் மக்களின் முற்காலப் பழக்க வழக்க ஒழுக்கங்களும், தமிழ் மொழியின் நேர்மையும் மாண்பும் ஏற்றமும் இந்நூலின் கண் தெற்றெனக் காணலாகும். இந்நூலின் எழுத்ததிகாரச் சொல்லதிகாரச் சூத்திரங்களைக் கற்போர் நன்னூலாகியவற்றைப் புன்னூலாதியனவாகக் காண்பரென்பது திண்ணம்.

இந்நூற்கு உரை எழுதினோர் இளம்பூரணர், கல்லாடர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், சேனாவரையர் என்னும் ஐவர். அவருள் இளம்பூரணரும், பேராசிரியரும் இந்நூலின் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், என்னும் மூன்றதிகாரங்களுக்கும் உரை இயற்றியுள்ளார்கள். கல்லாடர் எழுத்ததிகாரத்திற்கும் சொல்லதிகாரத்திற்கும் மாத்திரம் உரையெழுதி இருப்பதாகவும், சேனாவரையர் சொல்லதிகாரத்திற்கு மாத்திரம் உரையெழுதியிருப்பதாகவும் தெரிகிறோம். அவ்வைந்துரைகளும் முறையே இளம்பூரணம், கல்லாடம், பேராசிரியம், நச்சினார்கினியம், சேனாவரையம் என வழங்குகின்றன.

இவ்வுரைகளில் நச்சினார்கினிய எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் தனித்தனியே அச்சாகி வெளிவந்துள்ளன. நச்சினார்கினியப் பொருளதிகாரமும், பேராசிரியப் பொருளதிகாரமும் கலந்து அச்சாகி வெளிவந்துள்ளன. பேராசிரியச் சொல்லதிகாரம் கரந்தை தமிழ்ச் சங்கத்தாரால் அச்சிடப்பெற்று முடிந்து விரைவில் வெளிவரும் நிலைமையில் இருக்கின்றது. இளம்பூரணம் எழுத்ததிகாரம் பல ஆண்டுகளுக்கு முன்னர்ப் பூவிருந்தவல்லிக் கன்னியப்ப முதலியாரால் அச்சிட்டு வெளிப்படுத்தப் பட்டது. அவ்வெழுத்ததிகாரத்தைப் பல ஏட்டுப் பிரதிகளோடு ஒப்பிட்டுப் பார்த்துத் திருத்தி யான் இப்பொழுது அச்சிட்டு வெளிப்படுத்துகின்றேன். இளம்பூரணம் பொருளதிகாரம் அகத்திணையியலும் புறத்திணையியலும் முன்னரே அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளேன். சொல்லதிகாரமும்

பொருளதிகாரத்தின் பிந்திய இயல்களும் விரைவில் அச்சிட்டு வெளியிடப்பெறும்.

இளம்பூரணரே முதல் உரையாசிரியர். அவர் ''உரையாசிரியர்'' என யாவராலும் வழங்கப்படும் பெருமை வாய்ந்தவர். அவர் மூன்று அதிகார உரைகளுள்ளும் எழுத்ததிகாரவுரை ''எழுத்திற்கு இளம்பூரணம்'' என்று யாவராலும் புகழப் பெற்றது. கற்போர் எளிதில் உணருமாறு பொருட்டொடர்பு நோக்கி சூத்திரச்சொற்களையும் அவற்றின் பொருட்சொற்களையும் பிரித்தும் நிறுத்தி படித்தற்குரிய அடையாளங்களிட்டும் பதிப்பித்துள்ளேன். ஒவ்வோரிடத்தும் பாட வேறுபாடும், உரை வேறுபாடும் சேர்த்துள்ளேன். எனது சேர்ப்பிற்கு முன்னும் பின்னும் முறையே [ ] இக்குறிகள் இட்டுள்ளேன்.

இவ்வெழுத்ததிகாரத்தையும் பொருளதிகாரத்தையும் 1920-ம் வருடத்தில் அச்சிடத் தொடங்கினேன். பொருளதிகாரம் அகத்திணையியல் புறத்திணையியல்கள் முன்னரே அச்சாகி வெளிவந்துள்ள. இஃது இப்பொழுது வெளி வருகின்றது. பொருளதிகார ஏனைய இயல்களும் சொல்லதிகாரமும் விரைவில் வெளிவரும்.

1-6-1928, கோவில்பட்டி. வ.உ.சிதம்பரம்பிள்ளை.

தூத்துக்குடி விக்டோரியா பிரிண்டிங் பிரஸ்

1928ல் தொல்காப்பியம், எழுத்ததிகாரம், இளம்பூரணம் உரையை வெளியிட்ட வ.உ.சி.அவர்களது காலத்திற்குப் பின்னரும், 1936லும், 1941லும் தொல்காப்பியம் இளம்பூரணம் எழுத்ததிகாரம் பதவுரையோடு தூத்துக்குடி விக்டோரியா பிரிண்டிங் பிரஸில் அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளது. தொல்காப்பியம், இளம்பூரணம், எழுத்ததிகாரம் வ.உ.சி.யின் பதிப்பில் ஒரு சிறுபகுதி இதோ...

எழுத்ததிகாரம் - நூன்மரபு

19. வல்லெழுத் தென்ப க ச ட த ப ற

இது, தனிமெய்களுள் சிலவற்றிற்கு வேறு ஓர் குறியிடுதல் நுதலிற்று.

இ-ள்: வல்லெழுத்து என்ப-வல்லெழுத்து என்னும் குறியஎன்று சொல்லுவர், க ச ட த ப ற - க ச ட த ப ற என்னும் தனிமெய்களை.

வல்லென்று இசைத்தலானும், வல் என்ற தலைவளியாற் பிறத்தலானும் வல்லெழுத்து எனப்பட்டது. மொழிக்கு முதலாமெழுத்து நான்கு உளவாகலானும், அவற்றால் வழக்குப்பயிற்சி பெரிதாகலானும் [வல்லினம்] முன்கூறப்பட்டது. [க ச ட த ப ற என்னும் தனிமெய்கள் க் ச் ட் த் ப் ற்]

20. மெல்லெழுத் தென்ப ங ஞ ண ந ம ன

இதுவும் அது.

இ-ள்:- மெல்லெழுத்து என்ப - மெல்லெழுத்து என்னும் குறிய என்று சொல்லுவர், ங ஞ ண ந ம ன - ங ஞ ண ந ம ன என்னும் தனிமெய்களை.

மெல்லென்னு இசைத்தலானும், மெல் என்ற மூக்கின்வளியாற் பிறத்தலானும், மெல்லெழுத்து எனப்பட்டன. மொழிக்கு முதலாமெழுத்து மூன்று உளவாகலானும் அவற்றின் வழக்குப்பயிற்சியானும் [மெல்லினம்], முதலாமெழுத்துச் சிறுபான்மை வழக்கினவாய் இரண்டாகிய இடையினத்தின்முன் வைக்கப்பட்டது. வன்மை மென்மை கூறலின், எழுத்து அருவன்றி உருவாதல் பெறப்பட்டது. உயிருக்கும் குறுமை நெடுமை கூறலின், உருவென்பது பெறுதும்.

[ங ஞ ண ந ம ன என்னும் தனிமெய்கள் ங் ஞ் ண் ந் ம் ன்]

21. இடையெழுத் தென்ப ய ர ள வ ழ ள.

இதுவும் அது.

இ-ள் :- இடையெழுத்து என்ப - இடையெழுத்து என்னும் குறிய என்று சொல்லுவர், ய ர ல வ ழ ள-ய ர ல வ ழ ள என்னும் தனிமெய்களை.

இடைநிகரவாகி ஒலித்தலானும், இடைநிகர்த்தாய மிடற்றுவளியாற் பிறத்தலானும் இடையெழுத்து எனப்பட்டது. [ய ர ல வ ழ ள என்னும் தனிமெய்கள் ய் ர் ல் வ் ழ் ள்]

தொல்காப்பியம்.

இளம்பூரணம்.

எழுத்ததிகாரம்.

பதவுரை.

வ. உ. சிதம்பரம் பிள்ளை,
பதிப்பாசிரியன்.

விக்டோரியா பிரிண்டிங் பிரஸ், தூத்துக்குடி.

1941

1933 இல்

தொல்காப்பியம் இளம்பூரணம் பொருளதிகாரத்தின் களவியல், கற்பியல், பொருளியல் ஆகியவற்றை 1933 இல் பதிப்பித்து மகிழ்ந்தவர் வ.உ.சி. 292, எஸ்பிளனேட், சென்னை முகவரியில் இயங்கிவந்த வாவிள்ள இராமஸ்வாமி சாஸ்துருலு அண்ட்ஸன்ஸ் நிறுவனத்தார் அதனை பிரசுரித்து மகிழ்ந்தனர். அப்போது வ.உ.சி. எழுதிய பதிப்புரை இதோ.

பதிப்பாசிரியர் குறிப்பு

''இப்பகுதியில் இப்பொழுது வெளியிடப்படுவது தொல்காப்பியம் பொருளதிகார இளம்பூரணருரையில் இரண்டாவது பகுதி. இதிலே களவியல், கற்பியல், பொருளியல் என்பன அடங்கியுள்ளன. ஏனை இயல்களும் அச்சில் இருக்கின்றன. விரைவில் இளம்பூரண முழுமையும் வெளிவரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

த.மு. சொர்ணம்பிள்ளை

இதனை வெளியிடுதற்குக் கிடைத்த கடிதப் பிரதிகளில் ஒன்று காலஞ் சென்ற த.மு. சொர்ணம்பிள்ளையவர்களுக்குரியதாகும். அவர்கள் பிரதிசெய்யும் பொழுது உரையில் இல்லாத பலசொற்றொடர்களை இடையிடையே பெய்திருக்கிறார்கள் என்பது பல காரணங்களால் ஊகிக்கக்கூடிய தாயிருக்கிறது. பிறிதொரு பிரதி ஸ்ரீமான் தி.நா. சுப்பிரமணிய ஐயரிடமிருந்து கிடைத்தது. இது சொர்ணம்பிள்ளையவர்களது பிரதியைப் பார்த்து எழுதிய கடிதப் பிரதியின் பிரதியென்று தெரியவருகிறது. இதிலும் பலவகையான இடைச்செருகல்கள் உள்ளன. மூன்றாவது பிரதி ஸ்ரீமான் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களுக்குரியது.

தி.த. கனகசுந்தரம்பிள்ளை

இது 1912ல் ஸ்ரீமான் தி.த. கனகசுந்தரம்பிள்ளையவர்கள் ஏட்டுப் பிரதியைப் பார்த்து எழுதிய கைப்பிரதியாகும். இதுவே இடைச்செருகல் களைத் தெரிந்து கொள்வதற்கும் மூலத்தின் சுத்தபாடத்தை நிச்சயிப்பதற்கும் பெரிதும் பயன்பட்டது. இதனையே த.மு. சொர்ணம் பிள்ளையவர்கள் இரவலாகப் பெற்றுத் தமக்குத் தோற்றியவாறு பலவிடங்களில் மாற்றியுங் கூட்டியும் பிரதி செய்து கொண்டார்கள்.

இப்பொழுது வெளியிடும் பகுதியில் ஒரு சில இடங்களில்

இளம்பூரணருரை மறைந்து போய்விட்டது. இவ்விடங்களில் நச்சினார்க்கினியருரையைத் தழுவி உரையெழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வகையான இடங்கள் அங்கங்கே அடையாளமிட்டுக் காட்டப்பட்டுள்ளன. இருதலைப்பகரத்துள் அமைத்துள்ள எழுத்துக்களும் சொற்களும் இன்றியமையாமை பற்றிப் புதிதாகச் சேர்க்கப்பட்டன வாகும்.

வ.உ.சிதம்பரம்பிள்ளை.

1935 - பிரசுரிப்போரின் முன்னுரை

தொல்காப்பியம் இளம்பூரணம் பொருளதிகாரம் மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் ஆகியவைகளை 1935 இல் மேற்சொன்ன அதே நிறுவனத்தாரின் உதவியுடன் பதிப்பித்தார் வ.உ.சி. அப்போது பிரசுரிப்போர் தந்த முன்னுரை இதோ...

லோகமான்ய பாலகங்காதர திலகரவர்கள் என்னை ஸ்ரீமான் வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்களுக்கு அறிமுகம் செய்துவைத்த போதுதான் யான் முதல் முதல் பிள்ளையவர்களைக் கண்டு களிப்புற்றேன். ஸ்ரீமான் பிள்ளையவர்கள் தமது நீண்டகாலச் சிறைவாஸத்திற்குப்பின் (மஹாத்மா காந்தியவர்கள் இராஜீய விஷயங்களில் தலைமைபூண்ட நாள் தொடங்கி) அவ்விஷயங்களினின்று விலகித் தாம் முன் வக்கீல் வேலை பார்த்துக் கொண்டிருந்த காலத்திலும், இராஜீயத்துறையில் வேலை செய்து கொண்டிருந்த காலத்திலும், தமது கவனத்தைக் கவர்ந்து கொண்டிருந்த தொன்மைத் தமிழ் நூல்களை ஊக்கத்தோடு ஆராய்ச்சி செய்து கொண்டு வந்தனர். இத்துறையில் பிள்ளையவர்கள் சென்ற சுமார் முப்பதுவருஷம் உழைத்ததன் பயனாகும் இந்நூலின் வெளிவரவு. தொன்மையானதென்றும் தலைமையானதென்றும் யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டதும், தமிழ்நாட்டிலும் அதற்கு அப்பாலும் பெரும்புகழ் பெற்றதுமான தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் இயற்றிய உரையைப் பிள்ளையவர்கள் ஆராய்ச்சிசெய்து, ஏடுபெயர்த்து எழுதியோர்களால் நேர்ந்தபிழைகளைக் களைந்து சீர்திருத்தம் செய்தார்கள். தொல்காப்பியத்தின் காலத்தைப் பற்றிச் சென்ற சில வருஷங்களாகத் தமிழ்ப்பண்டிதர்களுள் அபிப்பிராயபேதம் ஏற்பட்டிருக்கிறது; ஆனாலும், அந்நூல் கிறிஸ்து பிறந்ததற்கு முந்நூறு வருஷங்களுக்கு முற்பட்டதென்பதில் ஐயமேயில்லை. இத்தகைய நூலை அச்சிட்டுப் பிரசுரிக்கும் படியாக ஸ்ரீமான். பிள்ளையவர்கள் என்னைக் கேட்டுக்கொண்டபோது நான் உவகையுடன் உடனே ஒப்புக் கொண்டேன். ‘தமிழ்லெக்ஸிக்கன் ஆசிரியர் ஸ்ரீமான் எஸ். வையாபுரிபிள்ளை உதவியும்

ஒத்துழைப்பும் இந்நூலை எளிதில் வெளிவரச் செய்தன. அவர்கள் மிகக் கவனத்தோடும், ஊக்கத்தோடும் இப்பதிப்பினைப் பரிசோதித்திருக் கிறார்கள். அவர்களைப் போன்ற ஒரு பெருங்கல்வியாளருடைய உதவி இவ்வளவினதென்று அளவிடற்பாலதன்று. இந்நூல் இவ்வுலகின்கண் இனிது நிலவுவதாக!

தண்டாயார்ப்பேட்டை, சென்னை. *வா. வெங்கடேஸ்வர சாஸ்த்ருலு,*
8-7-1935 *வா. இராமஸ்வாமி சாஸ்த்ருலுஅண்டுஸன்ஸ்*

எஸ். வையாபுரிப் பிள்ளை

சரவணப்பெருமாள் பிள்ளையின் புதல்வராக நெல்லையிலே பிறந்தவர் ச.வையாபுரிப் பிள்ளை (1888-1956) ஆவார். இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆராய்ச்சித்துறைப் பேராசிரியராகப் பணியாற்றி, 'தமிழ்ப் பேரகராதியை' வெளியிட்டுத் தமிழுக்காக இறுதி வரையில் கடமையாற்றியவர்; இவரது துணையுடன் வ.உ.சி. தொல்காப்பியப் பதிப்புக்களை வெளியிட்டு மகிழ்ந்தார். அந்தப் பதிப்பு வெளிவந்தபோது வ.உ.சி.தந்த பதிப்புரை இதோ...

வ.உ.சி. தந்த பதிப்புரை

''தொல்காப்பியத்தைப் படிக்கும் பாக்கியம் எனக்கு 1910-ம் வருடம் கிடைத்தது. அதன் பொருளதிகாரத்தை யான் படித்த போது, அதில் வேறு எம்மொழி இலக்கணத்திலும் காணப்படாத நிலப்பாகுபாடு, நிலங்களின் மக்கள், ஏனைய உயிர்கள், மரங்கள், செடிகள், மலர்கள், மக்களது ஒழுக்கங்கள், பழக்கவழக்கங்கள் முதலியன கூறப்பட்டிருக்கக் கண்டேன். இவ்வொப்புயர்வற்ற நூலைத் தமிழ்மக்கள் படியாததற்கு ஒரு காரணம். இந்நூலிற்கு ஆன்றோர் இயற்றியுள்ள உரைகளின் கடினநடையென்று உணர்ந்தேன். இந்நூலைத் தமிழ்மக்கள் யாவரும் கற்கும்படி எளியநடையில் ஓர் உரை எழுதவேண்டுமென்று நினைத்தேன்; உடனே எழுத்ததிகாரத்தின் முதற்சில இயல்களுக்கு உரையும் எழுதினேன்.

தி. செல்வக்கேசவராய முதலியார்

பின்னர், யான் சென்னை-பிரம்பூரில் வசித்த காலத்தில் என் உரையைப் பூர்த்திசெய்யக் கருதி முன் எழுதியிருந்த எழுத்ததிகார இயல்களின் உரையைத் திரு.தி.செல்வக்கேசவராய முதலியார் (எம்.ஏ.,) அவர்களும் யானும்

சரிபார்த்தோம். அப்போது தொல்காப்பிய இளம்பூரண எழுத்ததிகார அச்சுப்புத்தகமும், சொல்லதிகார ஏட்டுப்பிரதிகள் சிலவும் பொருளதிகார ஏட்டுப்பிரதியொன்றும் திரு.த.கனகசுந்தரம்பிள்ளை (பி.ஏ.,) அவர்களிடமிருந்து கிடைத்தன. இளம்பூரணத்தை யான் படித்தபோது அதன் உயர்வும், சிறப்பும், எளிய நடையும் தொல்காப்பியத்திற்கு யான் உரை எழுதுவது மிகையென்று நினைக்கச் செய்தன. பின்னர் என் உரையைப் பூர்த்தி செய்யும் எண்ணத்தை விடுத்து, இளம்பூரணத்தை அச்சிட்டு வெளிப்படுத்த எண்ணினேன். முதலில் எழுத்ததிகாரத்தை ஒரு புத்தகமாகவும், பின்னர்ப் பொருளதிகாரத்தின் அகத்திணையியலையும், புறத்திணையியலையும் ஒரு புத்தகமாகவும் அச்சிட்டு வெளிப்படுத்தினேன். அச்சமயம் யான் சென்னையை விட்டுக் கோயமுத்தூர் முதலிய வெளியூர்களுக்குச் சென்று அவ்வூர்களில் வசிக்கநேர்ந்தது. அதனால் இளம்பூரணப் பொருளதிகாரத்தின் பிந்திய இயல்களை அச்சிட்டு முடிக்க இயலாமற் போய்விட்டது.

சில வருடங்களுக்குப்பின், தமிழ் தொன்னூல்களின் ஏட்டுப் பிரதிகளைப் பலவிடங்களில் தேடிப்பெற்றுப் பரிசோதித்துக் கொண்டுவருந் தமிழ்ப் பேரகராதி (ழிழ்ளங்ஜி உமஒங்ச்ஸ்ரீஊ) ஆசிரியர் திரு.எஸ். வையாபுரி பிள்ளை (பி.ஏ., பி.எல்.,) அவர்களின் நட்பு எனக்குக் கிடைத்தது. அவர்களிடம் இளம்பூரணப் பொருளதிகாரத்தின் பிந்திய இயல்களை அச்சிட இயலாமலிருக்கிற நிலைமையைத் தெரியப் படுத்தினேன். என் உண்மைத் தேசாபிமானத்தையும் பாஷாபிமானத்தையும் கண்டு, அவ்வியல்களை அச்சிடுதல் சம்பந்தமான ஆசிரியர் வேலைகளைத் தாமே செய்வதாகப் பிள்ளையவர்கள் வாக்களித்தார்கள்.

மேற்கூறிய இயல்களின் காயிதக் கையெழுத்துப் பிரதிகளையும், திரு.த. கனகசுந்தரம் பிள்ளை யவர்களின் பொருளதிகார ஏட்டுப்பிரதியையும் திரு. வையாபுரி பிள்ளை யவர்களுக்கு அனுப்பினேன். அவர்கள் காயிதப் பிரதிகளை ஏட்டுப்பிரதிகளோடு ஒப்பு நோக்கிக் காயிதப் பிரதியிற்கண்ட வழுக்கள் முதலியவற்றைக் களைந்தும், அச்சுத்தாள் (புரூவ்)களைச் சரிபார்த்துத்திருத்தியும், மேற்கோட்செய்யுள்களின் நூற்பெயர் முதலியவற்றைத் துலக்கியும், முதலில் களவியல், கற்பியல், பொருளியல் இம்மூன்றையும் அச்சிட்டு ஒரு புத்தகமாக்கித் தந்தார்கள். இப்போது ஏனைய இயல்களையும் புத்தக வடிவில் வெளிவரச் செய்தார்கள். இவ்வேழு இயல்களுக்கும் பெயரளவில் பதிப்பாசிரியன் யான்; உண்மையிற் பதிப்பாசிரியர்

திரு.வையாபுரிப் பிள்ளையவர்களே. அவர்கள் செய்த நன்றி என்னால் என்றும் உள்ளற்பாலது.

யான் அனுப்பிய ஏட்டுப்பிரதியும் கடிதப்பிரதிகளுந் தவிர, வேறுசில ஏட்டுப்பிரதிகளும் இப்பதிப்பிற்கு உபகாரப்பட்டன. செய்யுளியற் பிரதி யொன்றும், மரபியற் பிரதி யொன்றும் இப்பொழுது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழாராய்ச்சி செய்துவரும் ஸேதுஸம்ஸ்தான மகாவித்துவான் ஸ்ரீ.ரா. ராகவையங்காரவர்கள் மிக்க அன்புடன் உதவினார்கள். செய்யுற் கடிதப் பிரதியொன்று மயிலாப்பூர். பி.எஸ்.ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ.எம்.வி. துரைசாமியையரவர்கள் அன்பு கூர்ந்து கொடுத்தார்கள். இவ்விருவர்க்கும் எனது மனப்பூர்வமான நன்றியுரியதாகின்றது. இடையிடையே ஒரு சிலபாரங்கள் தமிழ்லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ.மு. ராகவையங்கா ரவர்களாலும், ஸ்ரீ துரைசாமியையரவர்களாலும் பார்வையிடப்பட்டன. இங்ஙனம் உதவிய நண்பர்களுக்கு எனது நன்றியைச் செலுத்துவதல்லது யான் யாது கைம்மாறு செய்யவல்லேன்!

தமிழ்நாடு முழுவதிலும் பொருளதிகார இளம்பூரணருரை முற்றுமடங்கிய பிரதி ஒன்றேயுள்ளது. இப்போது அங்கங்கே ஒரு சிலரிடத்துள்ள பிரதிகளனைத்தும் இவ்வேட்டுப் பிரதியைப் பார்த்தெழுதிக் கொண்ட கடிதப் பிரதிகளேயாகும். இக்கடிதப் பிரதிகள் சிலவற்றில் ஒரு சிலவிடங்களில் ஏட்டுப் பிரதியிற் காணப்பெறாத விஷயங்கள் ஆதாரமின்றி நுழைத்தெழுதப்பட்டன. அவ்வாறு நுழைத்தெழுதியவற்றையெல்லாம் களைந்து ஏட்டுப் பிரதியிலுள்ளவாறே இப்பதிப்பு எனது நண்பர் வையாபுரிப் பிள்ளையவர்களாற் சித்தஞ் செய்யப்பட்டுள்ளது.

மேற்கோளகராதியில் விடுபட்ட மேற்கோள்கள் 32-ம் பக்கத்தில் உடுக்குறியின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ளன.

இங்ஙனம் பதிப்பிக்கப்பெற்ற இவ்வுரை இளம்பூரணருடையதே யென்பதற்குத் தக்க சான்றுகள் இருந்தபோதிலும், என் வசமிருந்த ஏட்டுப் பிரதியிலேனும் ஸ்ரீ. ரா. ராகவையங்காரவர்கள் உதவிய ஏட்டுப் பிரதிகளிலேனும் (செய்யுளியல்,மரபியல் அடங்கியன) இன்னாரியற்றிய வுரையென்பது எழுதப்பெறவேண்டிய இறுதியிதழ் காணப்படவில்லை. இதனைத் தமிழுலகிற்குத் தெரிவிக்குங் கடப்பாடுடையேன்.

மேற்குறித்த ஏழு இயல்களையும் தமது செலவில் அச்சிட்டு

வெளிப்படுத்த வேண்டுமென்று ஸ்ரீ. இராமசுவாமி சாஸ்துருலு அண்டு சன்ஸ் சொந்தக்காரரான எனது நண்பர் ஸ்ரீமான். வாவிள்ள வெங்கடேஸ்வர சாஸ்துருலு அவர்களுக்கு எழுதினேன். அவ் வேண்டுகோளுக்கு இணங்கி ஏழு இயல்களையும் அச்சிட்டுப் பிரசுரித்துத் தந்த எனது நண்பர் சாஸ்திரியா ரவர்களின் உதவி என்னால் என்றும் நினைக்கற்பாலது. எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிக.

15-1-1936, தூத்துக்குடி. வ.உ. சிதம்பரம்பிள்ளை,
பதிப்பாசிரியன்.

வ.உ.சி.யின் தொல்காப்பியப் பதிப்புரைகளிலிருந்து தமிழ் இலக்கிய வரலாற்றின் பகுதிகளையும், வ.உ.சி.யின் தூய தமிழ்த் தொண்டினையும் அறிய முடிகிறது.

தொல்காப்பிய ஆய்வுகள்

'தொல்காப்பியருக்குப் பின் மொழிவளர்ச்சியால் நிகழ்ந்த மாற்றங்கள், இலக்கண வளர்ச்சி போன்றவை பிற்காலத்தவருக்குத் தொல்காப்பிய நூற்பாக்களுக்குப் பொருள் அறிவதில் இடர்ப்பாட்டை உண்டாக்கின. இந்த இடர்ப்பாட்டினைக் களையும் வகையில் தொல்காப்பிய நூற்பாக்களின் பொருளைத் தெளிவுபடுத்தும் முறையிலும், அதனுள் கூறப்படும் இலக்கணக் கூறுகளை இலக்கிய, வழக்கு மேற்கோளைக் கொண்டு விளக்கும் நோக்கிலும் உரைகள் எழுந்தன.

இவ்வகையில் தொல்காப்பியத்துக்கு உரை எழுதியோர் உரையாசிரியர்களாக மட்டும் அல்லாமல் திறனாய்வாளர்களாகவும், ஆய்வாளர்களாகவும் நின்று தொல்காப்பிய ஆய்வினை வளர்த்து வந்துள்ளனர்' என்பர் கோ. கிருட்டிணமூர்த்தி.

உ

தொல்காப்பியம்

இளம்பூரணம்

பொருளதிகாரம்

மெய்ப்பாட்டியல், உவமையியல்,
செய்யுளியல், மரபியல்

பதிப்பாசிரியன்:

வ. உ. சிதம்பரம்பிள்ளை

பிரசுரித்தவர்கள் :

வாவிள்ள இராமஸ்வாமிசாஸ்த்ருலு அண்ட் ஸன்ஸ்

சென்னை.

1935

தொல்காப்பிய ஆய்வாளர்கள்

தொல்காப்பியப் பதிப்புகள் வெளிவர சிறந்த சேவையினைச் செய்திட்ட தமிழறிஞர்கள் பலராவர். அவர்களில் குறிப்பிடத் தகுந்த அறிஞர்கள் இதோ...

வை. சதாசிவபண்டாரத்தார்

மழவை மகாலிங்கையர், எஸ்.சாமுவேல்பிள்ளை, த.க.சுப்பராயச் செட்டியார், சி.வை.தாமோதரம் பிள்ளை, ஆறுமுகநாவலர், கோமளபுரம் இராசகோபாலப்பிள்ளை, அரசஞ்சண்முகனார், ச.பவானந்தம்பிள்ளை, ரா.ராகவையங்கார், கா.நமச்சிவாயமுதலியார், சி.புன்னைவனநாதமுதலியார், வை.சதாசிவபண்டாரத்தார், தி.த.கனகசுந்தரம்பிள்ளை, கந்தசாமியார், ரா. வேங்கடாசலம்பிள்ளை, பி.சா.சுப்பிரமணிய சாஸ்திரி (P.S.Subramanya Sastri)

ஞா. தேவநேயப் பாவாணர்

எஸ்.வையாபுரிப்பிள்ளை, வே.துரைசாமி ஐயர், ம.ஆ. நாகமணி, யாழ்ப்பாணம் சுன்னாகம் சி. கணேசையர், தி.சு.பாலசுந்தரம்பிள்ளை, மே.வீ.வேணுகோபாலப்பிள்ளை, ச.சோமசுந்தரபாரதியார், வே.வேங்கடராஜுலு ரெட்டியார், ஞா. தேவநேயப் பாவாணர், இ.எஸ்.வரதராஜ அய்யர் (E.S. Varadaraja Iyer) ஆ.பூவராகம்பிள்ளை, கா.ர. கோவிந்தராசமுதலியார், கு.சுந்தரமூர்த்தி, எஸ்.ராஜம், புலியூர்க்கேசிகன்.

ச.வே. சுப்பிரமணியன்

இராம.கோவிந்தசாமிப்பிள்ளை, க.வெள்ளைவாரணனார், ஆபிரகாம் அருளப்பன், வி.ஐ.சுப்பிரமணியன், சி.இலக்குவனார் (S.Ilaukuvanar), ச.வே.சுப்பிரமணியன், புலவர்குழந்தை, த.ச.மீனாட்சிசுந்தரம், வ.வடலூரனார், அடிகளாசிரியர், கு.மா. திருநாவுக்கரசு, தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், மு.அருணாசலம்பிள்ளை, ச.தண்டபாணி தேசிகர்.

க.ப.அறவாணன்

வ.வேணுகோபாலன், கு.பகவதி, டி.ஆல்பர்ட், பாலசுந்தரம், க.ப.அறவாணன், தாயம்மாள் அறவாணன், அ.கு.ஆதித்தர், இராமசுப்பிரமணியன், நிர்மல் செல்வமணி, கமில்சுவலபில், ச.சாம்பசிவனார், ஆ.சிவலிங்கனார் என்று பட்டியல் தொடர்கிறது...

1954

1936ல் வ.உ.சி. அவர்களின் பூதவுடல் இப்புவியிலிருந்து மறைந்ததற்குப் பின்னரும், 1954 களில் திரும்பவும் ஸ்ரீ. இராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்ட் சன்ஸ் நிறுவனத்தார் வ.உ.சி.யின் தொல்காப்பியப் பதிப்புகளை மறுபதிப்புச் செய்தனர்.

இருபத்தி ஐந்து ஆண்டுகள் இன்பத் தமிழுக்காக வ.உ.சி. அவர்கள் ஆற்றிய அரும்பணியின் ஓர் அங்கமாக தொல்காப்பியப் பதிப்புப்பணி அமைந்துள்ளது.

ஸ்ரீ. இராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்ட் சன்ஸ் நிறுவனத்தாரும், வா.வெங்கடேஸ்வர சாஸ்த்ருலு போன்றவர்கள் 65 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்மொழியின் மீதும், தமிழறிஞர் வ.உ.சி.யின் மீதும் கொண்ட பற்றுதலால் 1933 முதல் 1954 வரை 20 ஆண்டுகள் தொடர்ந்து தொல்காப்பியப் பதிப்புக்களை வ.உ.சி. உயிருடன் இருந்தபோதும், அவர்கள் பூதஉடல் மறைந்ததற்குப் பின்பும் தொடர்ந்து வெளியிட்டு வந்துள்ளனர்.

ஆனால் இன்று கால கதியில் அந்தப் பதிப்புக்கள் மறைந்து போகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

சமுதாய ஆர்வலர்கள், புரவலர்கள் வ.உ.சி.யின் தொல்காப்பியப் பதிப்புக்களை மறுபதிப்புச் செய்திட முன் வரவேண்டும்; அதற்காக உடல் உழைப்பினைத் தரச்சித்தமாக உள்ளோம். ஆனால் பெரும் செல்வம் படைத்த செல்வந்தர்கள் உதவினால் அவைகளைத் திரும்பவும் மறுபதிப்புக்களாக கொண்டு வர முடியும்; அதற்காக அனைவரும் முயற்சிப்போம்; தேசியத்தலைவர் வ.உ.சி.யின் தூய தமிழ்த்தொண்டு குறித்த வரலாற்றுச் செய்திகளை மறையவிடாமல் அனைவரும் சேர்ந்து பாதுகாத்திட முயல்வோம்! அதற்கு எல்லாம் வல்ல இறையருள் புரியுமாக! அருள்புரிந்திட ஆண்டவனை வேண்டுவோமாக!

✤ ✤ ✤ ✤

உ

சிவமயம்

வாழ்த்துகிறோம்

இன்று (26.01.2001) மணவிழாக் காணும்

திருவளர்ச் செல்வி

கா. சொர்ணதேவி B.Com., D.T.P.,

திருவளர்ச் செல்வன்

மா. அகஸ்தீஸ்வரன் (எ) குமார் B.A.,



வாழ்வில் எல்லா நலமும் பெற்று
வளமுடன் சங்கத் தமிழ் போல்
பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்திட
உள்ளம் பொங்கிட வாழ்த்துகிறோம்!
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்!

மணவிழாக் குழுவினர்
தூத்துக்குடி